வறட்சியைப் போக்க முடியும் என்றெல்லாம் நாட்டு மக்களிடையே ஒரு பலமான கருத்தைச் சொல்கிற போது வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிடமிருந்து கையேந்தி வாங்க மாட்டேன் என்ற தீவிரமான முடிவை இந்த மாமன்றத்திலே சொல்வதால் தமிழகத்திற்கு எவ்வளவு பெரிய குந்தகம் ஏற்படுகிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசியது பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது, அதுதான் முதலமைச்சரவர்களைப் புண்படுத்தியது, ஆத்திரமூட்டியது, ஆகவே, ஆவேசத்திற்கு ஆளாக்கியது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்திருக்கும். வறட்சிப் பணிக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு 6 இலட்சம் பேர்களுக்குப் பகிர்ந்தளிக்க ரூபாய் $7\frac{1}{2}$ கோடி கேட்டுள்ளனர். முன்பு கொடுக்கப்பட்ட வறட்சிப் பணம் சரியாக மக்களுக்குப் போய் சேரவில்லை ; இப்போது போய் சேருமா என்று பிரதமர் சொன்ன போது இங்குள்ளவர்களுக்குக் கோபம் வந்துள்ளது. இப்போது கொடுக்கிற பணம் மக்களுக்குப் போய்ச் சேர்ந்து, அதற்குரிய சரியான கணக்கை வைத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன், இன்னும் அதிகப் பணம் வேண்டுமென்றால் தருகின்ற கணக்கைப் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும் என்ற முறையில் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது.

தியாகராய நகர் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. இப்படி ஒரு மாநில அரசுக்குத் தருகின்ற பணத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு கருத்தை மத்திய அமைச்சர் வெளியிட்டிருக்கிறார். இதற்கு ஒரு தீவிரமான பதிலை, வேகமான பதிலைக் கட்சி அடிப்படையில் அல்ல ; அரசியல் அடிப்படையில் முதலமைச்சரவர்கள் மறுநாள் ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய நிதியமைச்சர் தெருவிலே எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் தெருவிலே பதில் அளித்திருக்கிறார்கள். அது ஒரு பெரிய அரசியல் மோதலாக முடிந்துவிட்டது.

மத்திய அமைச்சரின் கேள்விக்கு முதலமைச்சர் விளக்கம் அளித்தார். ஆனால் அது அரசியல் உட்கோட்டின்மீது கொண்ட மோதலாக முடிந்து விட்டது. அதனால் இந்த மன்றத்திலே வந்து, நிதியை வாங்கமாட்டேன், கையேந்தி நிற்கமாட்டேன் என்று சொல்வதன் மூலம் நம்முடைய திட்டப் பணிகள், ஆக்கப்பூர்வமான வேலைகள் பெரிதும் பாதிக்கப்படும். இந்தக் கருத்தினை வலியுறுத்தி ஒரு முடிவு காண்பதற்காகவே இன்றைய தினம் சர்வகட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

1975 மார்ச் 19] [திரு. ஆலடி அருணு

முதலமைச்சரவர்களின் தீவிரமான இத்தகைய முடிவிற்கு எற்கெனவே சர்வ கட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறுர்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் முதலமைச்சரவர்கள் மத்திய சர்க்கார் எங்கெங்கெல்லாமோ கோடிக்கணக்கில் செலவழித்துவிட்டது ; ஆனல் இந்த அரசுக்கு இல்லை என்று சொல்கிறுர்கள் என்ற அடிப்படையில் தன்னுடைய கருத்தைவெளியிட்டார்கள்.

கடந்த 5-ந்தேதி என்று கருதுகிறேன். நாடாளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் வெளியிட்ட ஒரு கருத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

'The Minister stated that the Centre has provided Rs. 45·04 crores by way of Advance Plan Assistance to six States during 1974–75. This was to be adjusted against the quantum of Central Plan Assistance due to the concerned States. The States getting Advance Plan Assistancefor drought and flood relief were Gujarat Rs. 14·4 crores, Rajasthan Rs. 10·24 crores, Orissa Rs. 7·91 crores, Madhya Pradesh Rs. 6·5 crores, Assam Rs. 4 crores and West Bengal Rs. 2·25 crores என்று 1974–75-ம், ஆண்டுக்குச் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசாங்கம் எந்த அளவுக்குச் செய்திருக்கிறது என்ற தகவலைச் சொல்லியிருக்கிறுர்கள். அந்த அடிப்படையில் நமக்கு $7\frac{1}{2}$ கோடி தருவதாகச் சொல்லி 6 கோடி ரூபாய் வரை இதுவரை தந்திருக்கிறுர்கள். இது நாம் கூட நமக்கு கீழே இருக்கிற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்குவது போன்றது தான். தொகையை மொத்தமாக ஒரே நேரத்தில் கொடுப்பதில்லை. வேலைகள் எப்படிச் நடக்கின்றன, பணம் எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பார்த்துதான் கொடுக்கிறேம். அந்த அடிப்படையில் மத்திய அரசு நமக்குத் தந்திருக்கிறது.

மத்திய அரசு கணக்குக் கேட்போம் என்று சொன்னல் எங்களுக்கு மட்டும்தான் அந்தக் கணக்கா என்று கேட்டார்கள். அப்படி மத்திய அரசு இந்த மாநிலத்தை மட்டும் கணக்குக் கேட்டிருந்தால் அது தவறு என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். நேற்று முன்தினம் மத்திய அமைச்சர் பதில் சொல்லும்போது கணக்குக் கேட்டது இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல ; அது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் என்று சொல்லியிருக்கிறுர்கள். எனவே, கணக்குக் கேட்டது தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல ; இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லா மாநிலங்களும் வறட்சிப் பணி கணக்குகளைச் சரியாகக் காட்ட வேண்டும்மென்று சொல்லியிருக்கிறுர்கள். ஆகவே, தமிழகத்தை மட்டும் அரசியல் நோக்கோடு, ஒரு உள் நோக்கோடு மத்திய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கணக்குக் கேட்டார் என்று நான் கருதவில்லை. அதற்குக் காரணம் நாடாளுமன்றத்தில் திரு. கமலநாதன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு சுப்பிரமணியம் அவர்கள் விளக்கமாக ஒரு நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறுர்கள். எனவே, முதலமைச்சர் அந்தத் தீவிரமான முடிவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.